நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகளுக்கு வழிகாட்டும் வேளாண் பல்கலை. வானொலி!**

ஆர். ஆதித்தன்

First Published : 15 Feb 2011 09:36:57 AM IST

கோவை, பிப். 14: கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால், விவசாயிகளுக்கான சமுதாய வானொலி சேவை நடத்தப்படுகிறது. இது கோவை பகுதி விவசாயிகளுக்கு உதவிகரமாக உள்ளது.

ஒரு காலத்தில் உரிமக் கட்டணம் செலுத்தி மட்டுமே வானொலி சேவையைக் கேட்க முடிந்தது. இன்றைய நிலையில் அதீத தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக செல்போனில் கூட சினிமா பாடல் தொடங்கி அரசியல், விளையாட்டு வரையில் பல்வேறு நிகழ்ச்சிகள் எஃப்.எம். சேனல்களில் இலவசமாக ரசித்துக் கேட்க முடிகிறது.

எஃப்.எம். சேனல்களில் நாட்டு நடப்புகள், சினிமா, அரசியல், கல்வி என பல துறை சார்ந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்றாலும், விவசாயம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. அந்த வகையில், விவசாயிகளுக்கென சமுதாய வானொலி சேவையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழம் ஒலிபரப்பி வருகிறது.

மத்திய அரசின் ரூ. 20 லட்ச நிதியுதவியுடன் கடந்த 2010 டிசம்பரில் தொடங்கப்பட்டு, ஜனவரி முதல் வாரத்தில் இருந்து விவசாயிகள் தொடர்பான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

இந்த வானொலி சேவைக்கு "வேளாண் பல்கலைக்கழக விவசாயி எஃப்.எம்.' என பெயரிடப்பட்டுள்ளது. 107.4 என்ற அலைவரிசையில் காலை 10.30 மணி முதல் பகல் 1 மணி வரை நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

வானொலி நேரத்தை மேலும் நீட்டிப்பதுடன் மாணவர்கள், வர்த்தகர்கள், வீட்டில் உள்ள பெண்கள், ஏற்றுமதியாளர்கள் தொடர்பான நிகழ்ச்சிகளும் விரைவில் ஒலிபரப்பப்பட உள்ளன.

சுமார் 18 கிமீ சுற்றளவில் இந்த வானொலி சேவை வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 22 கிராமங்களில் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் பேர் இந்தச் சேவையைக் கேட்க முடியும். வானிலை முன்னறிவிப்பு, மாநில அளவிலான காய்கறி விலை நிலவரம், மீன் வளர்ப்பு, கல்வி, பொழுதுபோக்கு உள்ளிட்ட பயனுள்ள தகவல்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இது குறித்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்குநர் கலைச்செல்வன் கூறியது:

மத்திய அரசு நிதியுதவியுடன் தொடங்கப்பட்டுள்ள இந்த சமுதாய வானொலியில் வேளாண்மைக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. மாணவர்கள், ஏற்றுமதியாளர்கள், வீட்டுப் பெண்கள் உள்ளிட்ட பலருக்கும் பயனுள்ள தகவல்களும், வீட்டில்

இருந்தபடியே கைத்தொழில்கள் செய்வது குறித்தும் துறை சார்ந்த வல்லுநர்கள் மூலம் ஒலிபரப்பப்படும்.

விவசாயிகளே தங்களின் அனுபவங்களை இந்த சமுதாய வானொலி மூலம் பகிர்ந்து கொள்ளலாம். வேளாண் துறை வல்லுநர்களிடம் விவசாயம் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்பட்டு, ஒலிபரப்பப்படும். இதன்மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வேளாண் நிலவரம் குறித்து, கோவையில் உள்ள ஒரு விவசாயி கேட்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

கல்வி நிகழ்ச்சிகள்: பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி சார்பில் கல்விக்கான சமுதாய வானொலி ஒலிபரப்பாகி வருகிறது. இந்த நிகழ்ச்சிகளை, வேளாண் சமுதாய வானொலியில் இணைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இதன்மூலம் விவசாயிகள் மட்டுமல்லாமல் மாணவர்களும் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளை கேட்க முடியும். இந்த வானொலி சேவை படிப்படியாக 12 மணி நேரமாக நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

**வாழை இலையும் விலை உயர்வு**

First Published : 15 Feb 2011 02:52:51 AM IST



காரைக்கால், பிப். 14: காய்கறிகளின் விலை உயர்வை தொடர்ந்து, தற்போது வாழை இலையும் கடுமையாக உயர்ந்து "கிராக்கி' பட்டியலில் இடம் பெற்றுவிட்டது.

காரைக்காலில் வாழை இலையின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சுபநிகழ்ச்சிகளுக்கு இலை கிடைக்காமல் மக்கள் வெளியூருக்கு அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்டத்தில் வாழை சாகுபடி இல்லை. இப்பகுதிக்குத் தேவையான வாழை இலை திருச்சி, கரூர், திருவையாறு, கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தருவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக விற்ற விலையைக்காட்டிலும், சற்று உயர்ந்திருந்த வாழை இலையின் விலை, இப்போது இருமடங்கு மேல் அதிகரித்துள்ளது.

சாதாரணமாக ஒரு ரூபாய்க்கும் குறைவாக விற்ற டிபன் இலை, இப்போது 2 ரூபாய்க்கும் மற்றும் அதற்கு மேலும் விற்கப்படுகிறது. 2 ரூபாய்க்கு விற்ற தலைவாழை இலை, இப்போது 4 ரூபாய்க்கும், அதற்குக் கூடுதலாகவும் விற்கப்படுகிறது. கடந்த ஒரு வாரமாக 2 இலை 10 ரூபாய் என்ற விலையில் வியாபாரிகள் விற்கின்றனர்.

இதனால், வாழை இலை வாங்குவதில் மக்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கின்றனர். காரைக்கால் சந்தைக்கு வெளியூரிலிருந்து இலை வரத்து வெகுவாக குறைந்துள்ளது. ஒரு கட்டு ரூ. 500-க்கு வாங்கிவரப்பட்ட நிலையில், இது இப்போது ரூ. 1100-க்கு வாங்கிவரப்படுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில், குறிப்பாக சென்னையிலும் இதுபோன்ற நிலை காணப்படுகிறது.

**மேய்ச்சலுக்கு இடமில்லை: கால்நடை விவசாயிகள் கவலை**

First Published : 15 Feb 2011 02:48:43 AM IST



புதுச்சேரி குருவிநத்தம்- பரிக்கல்பட்டு அருகே ரியல் எஸ்டேட் நிலத்தில் மேய்ச்சலுக்காக விடப்பட்டுள்ள மாடுகள்.

புதுச்சேரி, பிப்.14: புதுச்சேரியில் கால்நடைகள் மேய்வதற்கு இடம் இல்லாததால் தனியார் ரியல் எஸ்டேட் நிலங்களே தற்போது புகலிடமாக மாறி வருகிறது.

நகரமயமாதலில் அசுர வளர்ச்சி அடைந்து வருகிறது புதுச்சேரி. இதனால் இப்போது கிராமப் பகுதிகளில் உள்ள விளைநிலங்கள் எல்லாம் குடியிருப்புப் பகுதிகளாக மாறி வருகின்றன.

இதனால் விளைநிலங்களின் மதிப்பு உயர்ந்தது. ரியல் எஸ்டேட் நிறுவனங்களிடம் அதிக விலைக்கு நிலங்களைக் கொடுத்துவிட்டு அதில் கிடைக்கும் பணத்தை வங்கியில் டெபாசிட் செய்துவிடுகின்றனர் விவசாயிகள்.

ஒவ்வொரு ஊரிலும் ஒதுக்குப்புறம், புறம்போக்கு நிலங்கள் எல்லாம் இப்போது முற்றிலும் காணாமல் போய்விட்டன. அதுபோன்ற பகுதிகள் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு மேய்ச்சல் இடங்களாக இருந்து வந்தன.

விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் அதற்கு முன்பு அதிகளவில் ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகளை வளர்த்து வந்தனர். இப்போது பெரும்பாலானவர்கள் கால்நடை வளர்ப்பை குறைத்துக் கொண்டனர். ஒரு சிலர் முற்றிலுமாக நிறுத்தி விட்டனர்.

இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் கால்நடைகள் பராமரிப்பு, அதற்குத் தேவையான தீவனம் விலை உயர்வு, அதைப் பராமரிக்கும் பணியாளர்கள் இல்லாமை, மேய்ச்சல் நிலங்கள் இல்லாத நிலை போன்றவை முக்கியக் காரணங்களாக உள்ளன.

1976-77}ல் புதுச்சேரியில் விளை

நிலங்கள் 28 ஆயிரம் ஹெக்டேர் என்ற அளவில் இருந்தன. இப்போது 20,485 ஹெக்டேர் என்ற அளவுக்குக் குறைந்துவிட்டன.

கால்நடை வளர்ப்பு என்பது கிராமப்புறத்தைச் சார்ந்து அமைந்தது. இப்போது கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால் கிராமப் பொருளாதாரத்தில் சிக்கல் உருவாகி வருகிறது.

மேலும், விளைநிலங்களும் இல்லாததால் விவசாயிகள் கால்நடைகளை மேய்க்க மிகுந்த சிரமப்படுகின்றனர். இதனால் அவர்கள் அருகில் உள்ள ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு சொந்தமான காலி நிலங்களில் தங்களது கால்நடைகளை மேய்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து, புதுச்சேரி பரிக்கல்பட்டைச் சேர்ந்த முத்துலட்சுமி கூறுகையில், எங்களுக்குச் சொந்தமாக நிலம் ஏதும் இல்லை. இதனால் மாடு, ஆடுகளை ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு சொந்தமான நிலத்தில்தான் மேய்க்கிறோம். இப்போதைக்கு ரியல் எஸ்டேட் நிலங்கள் இல்லையென்றால் மேய்ச்சலுக்கு இடமில்லை.

மழைக்காலங்களில் ரியல் எஸ்டேட் பகுதியில் நீர் தேங்கி விடும். அதுபோன்ற சமயங்களில் மேய்ச்சல் நிலம் இல்லாமல் அவதிப்படுகிறோம். ஆடு, மாடு வளர்ப்பது தற்போது கஷ்டமான காரியமாகிவிட்டது என்றார்.

அதே ஊரைச் சேர்ந்த அஞ்சலாட்சி கூறுகையில், மேய்ச்சல் நிலங்கள் எல்லாம் இப்போது குடியிருப்பு நிலங்களாக மாறி வருகின்றன. இத்தகைய ரியல் எஸ்டேட் நிலங்களை நம்பிதான் நாங்கள் எங்களுடைய கால்நடைகளை வளர்த்து வருகிறோம். இதிலிருந்து கிடைக்கும் சொற்ப வருமானத்தில்தான் குடும்பம் நடக்கிறது என்றார்.

விளைநிலங்கள் குறைந்து வரும் இச்சூழ்நிலையில், ரியல் எஸ்டேட் மனைகள்தான் இப்போதைக்கு கால்நடைகளின் பசியாற்றும் புகலிடமாக இருந்து வருகின்றன.

**"பால் உற்பத்தியை அதிகரிக்க கறவை மாடுகளுக்கு சரிவிகித தீவனம்'**

First Published : 15 Feb 2011 09:48:44 AM IST

ஈரோடு, பிப். 14: பால் உற்பத்தியை அதிகரிக்க கறவை மாடுகளுக்கு சரிவிகித தீவனம் வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் தா.சவுண்டையா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கறவை மாடுகளின் பால் உற்பத்தியைப் பெருக்கவும், அதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கி கொள்ளவும் கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கறவை மாடுகளுக்கு, அவற்றின் உடல் எடைக்கு ஏற்றவாறு பசுந் தீவனம், அடர் தீவனம் மற்றும் உலர் தீவனம் ஆகியவற்றை சரிவிகிதத்தில் கொடுக்க வேண்டும்.

சரிவிகித அடிப்படையில் கறவைப் பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு தீவனம் கொடுப்பதால், அவற்றுக்குத் தேவையான மாவுச்சத்து, புரதம் மற்றும் கொழுப்புச் சத்து கிடைப்பதுடன், அதிகமான பால் உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகள் அதிக லாபமீட்டலாம்.

கறவை மாடுகளுக்கு சரிவிகித தீவனம் கொடுக்கப்படாத பட்சத்தில், பால் உற்பத்தி குறைவதுடன், மாடுகளுக்கு மலட்டுத் தன்மை ஏற்பட்டு, சினையுறுதல் பாதிக்கப்படும்.

மாவுச்சத்து குறைபாடு காரணமாக கீட்டோசிஸ் போன்ற நோய்கள் ஏற்படும்.

உடற்கூறு பாதிக்கப்படுவதால் கறவை மாடுகள், கால்நடைகள் வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது.

**ரூ.5.90 லட்சத்துக்கு வாழைத்தார் விற்பனை**

First Published : 15 Feb 2011 09:48:28 AM IST

கோபி, பிப். 14: கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ரூ.5.90 லட்சத்துக்கு வாழைத்தார் விற்பனை செய்யப்பட்டது.

கோபி-மொடச்சூர் சாலையில் உள்ள வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் வாழைத்தார் ஏல விற்பனை நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு 8 ஆயிரத்து 500 வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டன. இதில்,

கதலி கிலோ ரூ.22-க்கும், நேந்திரன் ரூ.18, செவ்வாழைத் தார் ரூ.445-க்கும், ரஸ்தாளி ரூ.250, பச்சை நாடான் ரூ.215, மொந்தன் ரூ.270, ரோபாஸ்டா ரூ.285, தேன்வாழை ரூ.340, பூவன் ரூ.300-க்கும் விற்பனை செய்யப்பட்டன.

கோபி, பங்களாபுதூர், தூக்கநாயக்கன்பாளையம், அத்தாணி, கொளப்பலூர், நம்பியூர், குருமந்தூர், குன்னத்தூர், அளுக்குளி, கொங்கர்பாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், வாழைத்தார்களைக் கொண்டு வந்தனர்.

திருப்பூர், தாராபுரம், காங்கயம், முத்தூர், பவானி, சேலம், ஈரோடு, கரூர், கொடுமுடி பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். தேபோல், தேங்காய் ஏல விற்பனைக்கு 8,000 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன.

குறைந்தபட்சம் ரூ.5.50-க்கும் அதிகபட்சம் ரூ.11-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.68 ஆயிரம் மதிப்பிலான தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டன.

**பால் உற்பத்தியாளருடன் அரசு இன்று பேச்சு**

First Published : 15 Feb 2011 02:37:43 AM IST

Last Updated : 15 Feb 2011 04:10:26 AM IST



சென்னை,பிப்.14: பால் கொள்முதல் விலை உயர்வு கோரிக்கை தொடர்பாக, உற்பத்தியாளர்களுடன் தமிழக அரசு செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தை நடத்துகிறது.

தலைமைச் செயலகத்தில் மூன்று அமைச்சர்கள் முன்னிலையில் மாலையில் பேச்சு நடத்தப்படுகிறது.

**இதுகுறித்து, முதல்வர் கருணாநிதி திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:**

"பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று உற்பத்தியாளர்களில் ஒரு பிரிவினர் கடந்த மாதம் போராட்டம் நடத்தினர். அவர்களது கோரிக்கையை ஏற்று, பசும் பாலுக்கு லிட்டருக்கு ஒரு ரூபாய் பத்து காசும், எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் இருபது காசும் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது.

இதற்குப் பிறகு, மீண்டும் பாலின் கொள்முதல் விலையை மேலும் உயர்த்த வேண்டும் என்று உற்பத்தியாளர்களில் ஒரு சாரார் கடந்த ஏழு நாள்களாகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். பால் கொள்முதல் விலை கடந்த மாதம்தான் உயர்த்தப்பட்டது. விலை உயர்வு தொடர்பாக அவர்களை மீண்டும் அழைத்துப் பேசுவதில் அரசுக்கு எந்த கௌரவப் பிரச்னையும் இல்லை.

ஆனால், அவர்கள் திடீரென்று வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்து, பாலை புனிதமாகக் கருதிட வேண்டிய அவர்களே, ஒரு சில லிட்டர் பாலைக் கொண்டு போய் சாலையில் ஊற்றினர், மேலும் அதைச் செய்தியாக்கினர். இதுதான் வேதனைக்கு உரியது.

எது எப்படியிருந்த போதிலும் இந்த அரசைப் பொறுத்தவரையில் நியாயமான கோரிக்கைகளில், மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதில் மிகுந்த அக்கறையுடனும் பரிவுடனும் செயல்பட்டு வருகிறது.

மீண்டும் பேச்சுவார்த்தை: பால் உற்பத்தியாளர்களை மீண்டும் அழைத்துப் பேச வேண்டும் என்ற யோசனையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி அளவில் நடைபெறகிறது. அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, பொன்முடி, மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் போராட்டக் குழுவினருடன் பேச்சு நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இதுவரை போராட்டம் நடத்தியவர்கள் மீது போடப்பட்டு இருந்த வழக்குகளை, நல்லெண்ண அடிப்படையில் திரும்பப்பெற முடிவு செய்யப்பட்டுள்ளது. போராட்டக் குழுவினரும் உடனடியாகத் தங்களது போராட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு பேச வருமாறு கேட்டுக் கொள்கிறேன்' என கோரியுள்ளார் முதல்வர் கருணாநிதி.

**நோயால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு: விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

First Published : 14 Feb 2011 10:20:31 PM IST

தாராபுரம், பிப். 13: தாராபுரம் பகுதியில் நோயால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க திருப்பூர் மாவட்டத் தலைவர் ஏ.காளிமுத்து, தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு விவரம்:

தாராபுரம் வட்டத்தில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்புத் தொழில் நடைபெறுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் பெய்த தொடர்மழை காரணமாக, கால்நடைகளுக்கு வாய்ச்சப்பை நோய் தாக்கியதில், ஏராளமான கால்நடைகள் இறந்தன.

நஞ்சியம்பாளையம் பகுதியில் 10 பசுமாடுகள், 100 செம்மறி ஆடுகள், கொளத்துப்பாளையம் பகுதியில் 100 பசுமாடுகள், குண்டடம் வட்டாரத்தில் 20 மாடுகள், 300-க்கும் மேற்பட்ட செம்மறி ஆடுகள், மூலனூர் வட்டாரத்தில் 50 பசுமாடுகள், 100 செம்மறி ஆடுகள் இறந்தன.

இதையடுத்து, விவசாயிகளுக்கு தங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதிகாரிகள் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வீடுகளுக்கு வந்து, பாதிப்பை பதிவு செய்து செல்கின்றனர். ஆனால், இதுவரை நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

எனவே, இது தொடர்பாக அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு, இறந்துபோன மாடுகளுக்கு தலா ரூ.30 ஆயிரமும், ஆடுகளுக்கு ரூ.3 ஆயிரமும் நிவாரண உதவி வழங்க வேண்டும்.

**சுரண்டையில் தக்காளி விலை வீழ்ச்சி**

First Published : 14 Feb 2011 11:11:26 PM IST

சுரண்டை, பிப். 13: சுரண்டையில் வரத்து அதிகரிப்பால் தக்காளி விலை வீழ்ச்சி அடைந்தது.

இங்குள்ள தினசரி காய்கனி சந்தையில் கடந்த வாரம் ரூ.18-க்கு விற்பனையான தக்காளி இப்போது ரூ.12-க்கும், ரூ.22-க்கு விற்பனையான புடலங்காய் ரூ.6-க்கும் விற்பனையாகிறது. ரூ.26-க்கு விற்பனையான கத்தரிக்காய் ரூ.24-ஆகவும், ரூ.18-க்கு விற்பனையான உருளைக் கிழங்கு ரூ.16-ஆகவும், ரூ.20-க்கு விற்பனையான பல்லாரி ரூ.15-ஆகவும் குறைந்துள்ளது. சுரண்டை, சுந்தரபாண்டியபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள காய்கனிகளின் மகசூல் காலம் தொடங்கியுள்ளதால் விலைகள் வீழ்ச்சி அடைந்துள்ளது.

**கொய்மலர் சாகுபடியை அதிகரிக்க அரசு உதவுமா?**

ம.அ. ஆரோக்கியசுவாமி

First Published : 14 Feb 2011 11:41:01 AM IST

கொடைக்கானல்,பிப். 13: கொடைக்கானலில் கொய்மலர் சாகுபடியை அதிகரிக்க மத்திய அரசு வழங்கும் மானியத் தொகையை அளிக்க, மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

கொடைக்கானல் சுற்றுலாத் தலமாக மட்டும் அல்லாது காய்கறிகள், பழவகைகள் விளைவிக்கப்பட்டு வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

ஆனால், கடந்த 10 ஆண்டுகளாகக் கொடைக்கானலில் விவசாய நிலங்கள் பிளாட்டுகளாக்கி விற்பனை செய்யப்பட்டு வருவதால் சாகுபடி அளவு குறைந்து வருகிறது.

இதனைத் தொடர்ந்து காய்கறிகளுக்கு இணையாக கொய்மலர் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வந்தனர்.

கொய்மலர் சாகுபடி செய்வதற்கு 13 செண்ட் இடம் இருக்க வேண்டும். பசுமைக் குடில் அமைத்து, 200 மைக்ரான் தன்மை கொண்ட பிளாஸ்டிக்கால் சமதளத்தில் குடில் அமைக்க வேண்டும். 21 டிகிரி செல்ஸியஸ்க்கு குறையாமல் வெப்பம் இருக்க வேண்டும். சொட்டு நீர்ப்பாசன முறையும் அமைத்திருக்க வேண்டும். மரத்தால் குடில் அமைப்பதற்கு ரூ. 3 லட்சமும்,இரும்பால் அமைப்பதற்கு ரூ. 6 லட்சமும் செலவாகும்.

இதில் தோட்டக்கலைத் துறை மூலம் ரூ. 1 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் வங்கிகள் மூலமாக கடன் உதவி வழங்குவதற்கு ஏற்பாடு செய்து தரப்படுகிறது.

ஒருமுறை கொய்மலர் நாற்று நடவுகளை நட்டால் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு தொடர்ந்து அதிலிருந்து மலர்கள் எடுத்து வரலாம் இந்த பசுமைக் குடிலில் ஜெர்பரா,ரோஸ், ஆந்தோரியம் உள்பட பல வகையான மலர்கள் விளைவிக்கப்படுகின்றன.

பண்டிகைக் காலங்களிலும், திருமண விழாக்களிலும் முக்கியப் பிரமுகர்களை வரவேற்கும் நிகழ்ச்சியில், இந்த கொய்மலர்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இவை பல நாள்களுக்கு அழகாக இருப்பதாலும்,பூக்கள் வாடாமல் இருப்பதாலும் இவற்றை பெரும்பாலும் பொதுமக்கள் விரும்புகின்றனர்.

கொடைக்கானலில் பண்ணைக்காடு,தாண்டிக்குடி,செண்பகனூர்,கிளாவரை, குண்டுபட்டி,கூக்கால் போன்ற இடங்களில் 80 சதவீதம் விவசாயிகள் ஆர்வமுடன் கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், கடந்த சில காலமாக உற்பத்தி செய்த கொய்மலர்களை விற்பனை செய்ய முடியாமலும், நல்ல விலை கிடைக்காததாலும், 35 சதவீத விவசாயிகள் மீண்டும் அதே இடத்தில் காய்கறிகளை சாகுபடி செய்து வருகின்றனர்.

இதுகுறித்து அப்பகுதி விவசாயி பால்ராஜ் கூறுகையில், கொடைக்கானல் மலைப் பகுதிகளில் காய்கறிகளுக்கு அடுத்தபடியாக கொய்மலர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தனர். ஆனால் விளைவித்த கொய்மலர்கள் விற்பனை செய்ய முடியாமலும்,குறைந்த விலைக்கு விற்பனை செய்து வந்ததாலும் தொடர்ந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. இதனால், சிறு விவசாயிகள் இந்தத் தொழிலை விட்டுவிட்டனர்.

பெரு விவசாயிகள் மட்டும் இந்தத் தொழிலை செய்து வருகின்றனர்.

கடந்த இரு மாதங்களாக கொடைக்கானலில் இருந்து, ஒரு நாளைக்கு ஒரு லட்சம் கொய்மலர்கள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

கொடைக்கானலில் விளைவிக்கப்படும் மலர்கள், மும்பைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பிரான்ஸ்,ஜெர்மன்,இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

பிப்ரவரி 14-ம் தேதி காதலர் தினமாக உள்ளதால், இவற்றின் விலை அதிகமாக இருக்கும். இதனால், இப்பூக்களுக்கு தற்போது அதிக கிராக்கி உள்ளது.

கொடைக்கானல் பகுதியில் விளையும் கொய்மலர்களை அரசு அல்லது தனியார் நிறுவனங்கள் நல்ல விலைக்கு கொள்முதல் செய்தால், இத்தொழில் வளர்ச்சி அடையும் என்றார் அவர்.

இதுகுறித்து, கொய்மலர் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த செயலாளர் ராஜலிங்கராஜா கூறியதாவது:

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன், கொடைக்கானலில் கொய்மலர் சாகுபடி செய்வதற்கு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை மூலம், பல உதவிகள் செய்து வந்தனர். ஆனால், படிப்படியாக அவை குறைக்கப்பட்டது.

இதனால், கொய்மலர் சாகுபடி செய்யும் விவசாயத் தொழிலாளர்கள் நலிவடைந்துள்ளனர். விவசாயமும் வெகுவாகப் பாதிப்பு அடைந்துள்ளது.

மத்திய அரசு கொய்மலர் சாகுபடிக்கு மானியங்கள் அளித்து வருகிறது.

ஆனால், மாநில அரசும், தோட்டக்கலைத்துறை அதிகாரிகளும் அவற்றை முழுமையாகத் தருவதில்லை. குறைந்த அளவு மானியத் தொகையை மட்டும் கொடுத்து வருகின்றனர்.

கொடைக்கானல் பகுதியில் விளையும் கொய்மலர்களுக்கு வெளி மார்க்கெட்டில் கிராக்கி உள்ளது. இவற்றை அதிக அளவு பயிரிடத் தேவையான ஆலோசனைகளையும் தோட்டக்கலை அதிகாரிகள் தருவதில்லை.

ஆகவே, கொய்மலர் சாகுபடியை அதிகரிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

இதுகுறித்து தோட்டக்கலைத்துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், கொய்மலர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அரசு ரூ. 3 லட்சம் மானியம் வழங்குகிறது. ஆனால், இந்த மானியத்தைப் பெறும் விவசாயிகள், அதை காய்கறிகள் சாகுபடிக்கு பயன்படுத்துகின்றனர். மேலும் கொய்மலர்களை பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கும் அரசு மானியம் வழங்குகிறது. ஆனால், இதை விவசாயிகள் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை. கொய்மலர் நாற்றுகளை புனேயில் இருந்து தருவித்து சாகுபடி செய்தால் அதன் தரம் நன்றாக இருக்கும். ஆனால், விவசாயிகள் உள்ளூரிலேயே நாற்றுகளை தருவித்து சாகுபடி செய்கின்றனர்.

ஆகவே தோட்டக்கலைத் துறை அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு, அதைச் செயல்படுத்தினால், கொய்மலர் சாகுபடியை விவசாயிகள் அதிகரிக்கலாம் என்றார்.

## 50 சதவீத மானியத்தில் பூச்சி மருந்துகள் விநியோகம்

First Published : 14 Feb 2011 11:42:31 AM IST

திண்டுக்கல், பிப். 13:விவசாயிகள் பயன்பெறும் வகையில் 50 சதவீத மானியத்தில் தரமான பூச்சி மருந்துகள் விநியோகிக்கப்படுவதாக வடமதுரை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:பூச்சித் தாக்குதலால் அதிகளவில் மகசூல் பாதிக்கிறது. பூச்சிகளை அழிக்க, மிகுதியாக விஷத்தன்மை உள்ள மருந்துகளை அதிக விலைக்கு வாங்கி விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.

இத்தகைய மருந்துகளால் பூச்சிகளை 100 சதவீதம் அழிக்க இயலாது. பூச்சிகளின் தாக்குதலை மட்டுமே குறைத்திட முடியும். மேலும், விஷத்தன்மை அதிகம் உள்ள மருந்துகளை உபயோகிப்பதால் மண்ணின் தன்மை கெடுவதுடன், உணவு தானியங்களிலும் விஷத்தன்மை ஏற்படும்.

எனவே, மண் வளத்தை பாதிக்காத வகையில் வேளாண் அதிகாரிகளிடம் ஆலோசனை பெற்று பூச்சி மருந்துகளை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்.

இப்போது என்.எப்.எஸ்.எம். மற்றும் ஏ.டி.பி. ஆகிய திட்டங்களில் 50 சதவீத மானிய விலையில் மோனோகுரோடோபாஸ், எண்டோசல்பான் ஆகிய பூச்சி மருந்துகளை அரசு விநியோகித்து வருகிறது. இப் பூச்சி மருந்தை பெற வடமதுரை வேளாண்மை விரிவாக்க கள அலுவலர்களை விவசாயிகள் அணுக வேண்டும் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"கடல் வண்ணமீன் வளர்ப்புக்கு அண்ணாமலைப் பல்கலை. உதவி'**

First Published : 14 Feb 2011 09:17:07 PM IST

சிதம்பரம், பிப்.13: கடல் வண்ணமீன் வளர்ப்புக்கான தொழில்நுட்ப உதவிகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வழங்கும் என துணைவேந்தர் எம்.ராமநாதன் உறுதி தெரிவித்தார்.

சிதம்பரத்தை அடுத்த பரங்கிப்பேட்டையில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின உயராய்வு மையத்தில் கடல் வண்ணமீன் வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நிறைவு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழகம், கேரளம், மேற்கு வங்கம், ஒரிசா, அந்தமான், நிக்கோபர், லட்சத்தீவு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மீன்வளத் துறை அதிகாரிகள், விஞ்ஞானிகள், தொண்டு நிறுவன அமைப்பாளர்கள், மகளிர் சுயஉதவிக் குழுவினர் சுமார் 175 பேர் இப் பயிற்சியில் பங்கேற்றனர்.

தேசிய மீன் வளர்ப்பு அபிவிருத்தி வாரியத்தின் நிதி உதவியுடன் இப்பயிற்சி கடந்த அக்டோபர் 13-ம் தேதி தொடங்கியது.

நிறைவு விழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் எம்.ராமநாதன் பங்கேற்று பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிப் பேசினார். அப்போது இங்கு பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் தொடங்க தொழில்நுட்ப உதவிகளையும், உற்பத்தி, விற்பனைக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழக உதவிகளை வழங்கும் என உறுதி தெரிவித்தார்.

தில்லி கடல்வாழ் அறிவியல் துறை விஞ்ஞானி ஜே.சுந்தரேசன் வாழ்த்துரையாற்றினார். அப்போது அவர் பேசியது:

உலகளவில் கடல் வண்ணமீன் உற்பத்தியில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவது மிகவும் குறைவு. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இந்த வண்ணமீன் உற்பத்தியை பெருக்க புதிய தொழில்நுட்பத்தை கண்டுபிடித்து பயிற்சி அளிப்பது வண்ணமீன் உற்பத்தியை பெரிதும் அதிகரிக்கும் என ஜே.சுந்தரேசன் தெரிவித்தார்.

மீன்வள பயிற்சி மற்றும் தொழில்நுட்ப மைய மூத்த அதிகாரி பி.செல்வராஜ் பேசுகையில், தமிழகத்தில் திருவாரூர், கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கடல் வண்ணமீன் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய உதவிகளை வழங்கவுள்ளோம் என தெரிவித்தார்.

கடல்வாழ் அறிவியல் புல முதல்வர் டி.பாலசுப்பிரமணியன் வரவேற்றார். கடல்வாழ் உயிரின உயராய்வு மைய முன்னாள் இயக்குநர் கே.அய்யாகண்னு, மக்கள்-தொடர்பு அதிகாரி எஸ்.செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியை உதவிப் பேராசிரியர்கள் டி.டி.அஜீத்குமார், எஸ்.குமரேசன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

தினமலர்

**ஒரு வெற்றிலை விலை ரூ.1.50 திருமண சீஸனால் தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,00:58 IST

ஈரோடு: வெற்றிலை விளைச்சல் குறைந்த நிலையிலும், திருமண சீஸன் காரணமாக, ஈரோட்டில் ஒரு வெற்றிலை 1.50 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தர்மபுரி, ஆத்தூர், பவானி, பாண்டமங்கலம், நாமக்கல், கரூர் பகுதியில் அதிகளவில் வெற்றிலை விளைகிறது. திருமணம், கோவில் விழாக்களில் கருப்பு வெற்றிலை பயன்படுத்துவர். பீடாவுக்கு வெள்ளை வெற்றிலை பயன்படுகிறது. பனிக்காலத்தில் வெற்றிலை விளைச்சல் அமோகமாக இருக்கும்.

ஆனால், சென்றாண்டு பெய்த பலத்த மழையால், தோட்டத்திலே வெற்றிலை அழுகி விட்டது; விளைச்சலும் குறைந்தது. தேவைக்கு குறைவாகவே வெற்றிலை வரத்து இருப்பதால், விலையும் ஏறுமுகமாகவே உள்ளது. தர்மபுரியில் இருந்து வரும் வெள்ளை வெற்றிலை ஒரு கட்டு 80 ரூபாய், கறுப்பு வெற்றிலை 100 ருபாய்க்கும் விற்கப்படுகிறது. பாண்டமங்கலத்தில் இருந்து வரும் வெற்றிலை சற்று தரம் குறைவாக இருப்பதால், கட்டு 52 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நேற்றைய நிலவரப்படி, ஒரு வெற்றிலை 1.50 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

வெற்றிலை வரலாறு காணாத விலை ஏற்றம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,01:24 IST

ப.வேலூர்: ஒரு சுமை வெற்றிலை, வரலாறு காணாத அளவுக்கு, 4,000 ரூபாய்க்கு ஏலம் போனதால், ப.வேலூர் பகுதியில் வெற்றிலை பயிரிட்ட விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ப.வேலூர் பகுதிக்கு உட்பட்ட பொத்தனூர், பாண்டமங்கலம், ஜேடர்பாளையம், ப.வேலூர், பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட காவிரிக்கரையோர பகுதிகளில், 2,000 ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு கற்பூரம் மற்றும் வெள்ளைமார் என, இரண்டு வகையான வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் வெற்றிலைகள், ப.வேலூரில் உள்ள ஆறு தினசரி வெற்றிலை மண்டிக்கு ஏலத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது. ஈரோடு, கோவை, பொள்ளாச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன் வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான வியாபாரிகள் வந்து, போட்டி போட்டு வெற்றிலையை ஏலம் எடுத்து லாரிகள் மூலம் எடுத்து செல்கின்றனர்.

நன்கு முதிர்ந்த வெற்றிலையை, 104 கவுளி கொண்ட ஒரு சுமையாக கட்டி, ஏல மண்டிக்கு கொண்டுச் செல்கின்றனர். சராசரியாக தினமும், 2,000 சுமைகள் ஏலத்துக்கு வருவது வழக்கம். இரண்டு வாரத்துக்கு முன்பு, 104 கவுளி கொண்ட கற்பூர வெற்றிலை ஒரு சுமை, 500 ரூபாய்க்கும், வெள்ளைமார் ஒரு சுமை, 1,500 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதை தொடர்ந்து, வெற்றிலையில் வாடல் நோய் தாக்கியதால், பயிர் கருகி விவசாயிகளுக்கு பெருத்த இழப்பை ஏற்படுத்தியது. அதனால், நேற்று நடந்த ஏலத்துக்கு, 600 சுமைகள் மட்டுமே வந்தது. வரத்து குறைவால் வெற்றிலை வரலாறு காணாத அளவுக்கு ஏலம் போனது. கற்பூர வெற்றிலை ஒரு சுமை, 4,000 ரூபாய்க்கும், வெள்ளைமார் ஒரு சுமை, 3,500 ரூபாய்க்கும் ஏலம் போனது.

இந்த அதிரடி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது: இப்பகுதியில் வாழை, கரும்புக்கு அடுத்து பணப்பயிராக வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. 2,000 ஏக்கர் பரப்பில் கற்பூரம் மற்றும் வெள்ளைமார் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன், 500 ரூபாய்க்கு ஏலம் போன கற்பூர வெற்றிலை நேற்று நடந்த ஏலத்தில் வரலாறு காணாத அளவுக்கு ஒரு சுமை, 4,000 ரூபாய்க்கு ஏலம் போனது. இந்த விலை உயர்வு எங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கறவை மாடுகளை விற்பனை செய்ய விவசாயிகள் முடிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,01:25 IST

ப.வேலூர்: ப.வேலூர் சுற்றுவட்டார கிராமப்புறங்களில் உள்ள கறவை மாடுகள் அடுத்தடுத்து உயிரிழந்து வருவதால், விவசாயிகள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. அதனால், கறவை மாடுகளை, விவசாயிகள் விற்பனை செய்ய முடிவு செய்துள்ளனர். ப.வேலூர் அருகே உள்ள ஊஞ்சப்பாளையத்தை சேர்ந்தவர் விவசாயி ராஜேந்திரன். அவர் வளர்த்து வந்த, 21 கறவை மாடுகள் கடந்த ஒரு மாதத்துக்கு முன் அடுத்தடுத்து உயிரிழந்தது. இச்சம்பவம், ப.வேலூர் சுற்றுவட்டார விவசாயிகள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியது. மர்ம நபர்கள் விஷம் வைத்து, கறவை மாடுகளை கொன்றிருக்கலாம் என, ஆரம்பத்தில் சந்தேகிக்கப்பட்டது. அதுதொடர்பாக ப.வேலூர் போலீஸாரும் விசாரணை நடத்தினர். விசாரணையில், மாடுகளுக்கு விஷம் எதுவும் வைக்கவில்லை. மர்மநோயால் கறவை மாடுகள் இறந்த விபரம் தெரியவந்தது. அதுதொடர்பாக, கால்நடை பராமரிப்புத் துறையினர் இறந்த மாடுகளை சோதனை செய்தனர். மாடுகளின் உடல் உறுப்புகள் ஆய்வுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. எனினும், கறவை மாடுகள் இறந்ததற்கான காரணம் இதுவரை தெரியவில்லை. இச்சூழலில், கடந்த வாரத்தில் மேலும் சில மாடுகள் இறந்துள்ளன. ஒரு சில மாடுகள் தீவனம் எதுவும் சாப்பிடாமல் படுத்தபடியே கிடந்தன. அதில் பீதியடைந்த விவசாயிகள், தங்களது மாடுகளுக்கு, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் சிகிச்சை அளித்தனர்.

இதனிடையே, கட்டமரபாளையத்தை சேர்ந்த செந்தில் என்பவரது மூன்று கறவை மாடுகள் மற்றும் ஊஞ்சப்பாளையத்தை சேர்ந்த சுப்ரமணி என்பவரது ஒரு மாடும் நேற்று உயிரிழந்தது. இந்த பகுதியில் பலரது மாடுகள் ஆபத்தான நிலையில் இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். கறவை மாடுகள் இறந்து வருவது, ப.வேலூர் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து ப.வேலூர் பகுதி விவசாயிகள் சிலர் கூறியதாவது: ஊஞ்சப்பாளையத்தை சேர்ந்த ராஜேந்திரன் என்பவரது, 21 கறவை மாடுகள் அடுத்தடுத்து செத்து மடிந்தன. அனைத்தும் வெளிநாட்டு ரக கறவை மாடுகள். அந்த மாடுகள் இறந்ததற்கான காரணம் எதுவும் தெரியவில்லை. கால்நடை டாக்டர்கள் சோதனை நடத்தியும் பயன் எதுவும் இல்லை. இதனிடையே, மேலும் சிலரது கறவை மாடுகள் உயிரிழந்துள்ளன. கறவை மாடுகள் தொடர்ந்து உயிரிழப்பது, எங்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இரவு வரை மாடுகள் நல்ல நிலையில் உள்ளது. மறுநாள் பார்த்தால் அவை இறந்து கிடக்கின்றன. என்ன காரணத்தினால் மாடுகள் இறக்கின்றன என்பது, மர்மமாக உள்ளது. இதற்கு கால்நடை பராமரிப்புத் துறையினர் விரைந்து தீர்வு காணவேண்டும்.

**கருகிய பயிர்களுக்கு நஷ்ட ஈடு வழங்காவிட்டால் தேர்தலை புறக்கணிக்க விவசாயிகள் முடிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,00:54 IST

திருநெல்வேலி : தண்ணீரின்றி கருகிய பயிர்களுக்கு நஷ்ட ஈடு வழங்காவிட்டால் தேர்தல் புறக்கணிப்பு போராட்டம் நடத்தப்படும் என்று திருவேட்டநல்லூர் விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் திருவேட்டநல்லூர் கிராம விவசாய சங்க தலைவர் ராமர் தலைமையில் பலர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது: விவசாய உற்பத்தியை பெருக்க மத்திய, மாநில அரசுகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் விவசாயம் நலிவடைந்து வருகிறது. விளைநிலங்கள் பிளாட்களாக மாறி உற்பத்தியை பாதிக்கிறது. இதனை தடுக்க தமிழக நதிகளை இணைக்கும் திட்டத்தை போர்க்கால அடிப்படையில் அரசு மேற்கொள்ள வேண்டும். மடத்துப்பட்டி கிராம எல்கைக்கு உட்பட்ட கலிங்கன் குளம், கருவேலன் குளம், இடைச்சிபாறைக் குளம், திருமேனியா குளம் ஆகிய குளங்களில் பிசான சாகுபடி செய்துள்ள நெற் பயிர்கள் நீரின்றி கருகிவிட்டன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.எனவே, இந்த விவசாயிகளுக்கு உடனடியாக நஷ்ட ஈடு வழங்க வேண்டும். இல்லையெனில் வரும் சட்டசபை தேர்தலை புறக்கணிக்க உள்ளோம். மேலும் பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தப்படும். இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சாம்பவர்வடகரையில் விதை உற்பத்தி பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,00:35 IST

தென்காசி : சாம்பவர்வடகரையில் விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது. செங்கோட்டை வட்டாரம் சாம்பவர்வடகரையில் விதை கிராம திட்டத்தின் கீழ் சிறு தானிய பயிரில் தரமான விதை உற்பத்தி செய்வது குறித்த பயிற்சி முகாம் நடந்தது. முதற்கட்ட பயிற்சியில் விதை சான்று நடைமுறைகள் பற்றி விளக்கப்பட்டது. இரண்டாம் கட்ட பயிற்சியில் விவசாயிகளை வயல் வெளிகளுக்கு அழைத்து சென்று கலவன்கள் கண்டறியும் முறை பற்றி விளக்கப்பட்டது. மூன்றாம் கட்ட பயிற்சியாக ஆய்க்குடி சுப்பையா விதை சுத்தி நிலையத்தில் செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமை வகித்து பேசும் போது, தரமான விதை உற்பத்தி செய்து வர்த்தக ரீதியில் செயல்படுத்துவது பற்றி விளக்கினார். விதை சான்று அலுவலர் அசோகன் விதை சுத்தி நிலைய பணிகள் பற்றி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் ஈரப்பதம் கண்டறியும் முறை பற்றி செயல் விளக்கம்

செய்து காட்டினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சந்திரன், செல்வக்குமார் செய்திருந்தனர்.

**தென்காசியில் மானியத்தில் களையெடுப்பு கருவி வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,00:45 IST

தென்காசி : தென்காசியில் மானியத்தில் களையெடுப்பு கருவி வழங்கப்பட்டது. தென்காசியில் தமிழ்நாடு அரசு வேளாண்மை பொறியியல் துறையின் வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 20 எச்.பி.வரையிலான சக்தி கொண்ட களையெடுக்கும் கருவி 50 சதவீத மானியத்தில் வழங்கும் விழா நடந்தது. வேளாண்மை உதவி செயற்பொறியாளர் ஆறுமுகநயினார் களையெடுப்பு கருவியை இலஞ்சியை சேர்ந்த விவசாயி காந்திமதிநாதன் மனைவி சங்கரிக்கு மானியத்தில் வழங்கினார். களையெடுக்கும் கருவியான மினி டிராக்டரின் மொத்த விலை 2 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய். இதில் விவசாயிகளின் பங்களிப்பு தொகை 1 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய். தமிழக அரசின் மானிய தொகை 1 லடசத்து 25 ஆயிரம் ரூபாய் ஆகும்.

**கற்குடியில் விதை கிராம திட்ட பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,00:35 IST

தென்காசி : கற்குடியில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது. செங்கோட்டை வட்டாரம் கற்குடியில் விதை கிராம திட்டத்தின் கீழ் பயறு வகை பயிரில் விதை உற்பத்தி குறித்த பயிற்சி முகாம் நடந்தது. விதை சான்று நடைமுறைகள், கலவன்கள் கண்டறியும் முறை பற்றி விளக்கப்பட்டது. மேலும் ஆய்க்குடி சுப்பையா விதை சுத்தி நிலையத்தில் நேரடி பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

விதை சான்று அலுவலர் அசோகன் விதை சுத்தம் செய்யும் முறை, மூடைகளில் சான்று அட்டை பொருத்தும் முறை பற்றி செயல் விளக்கம் செய்து காட்டினார். வேளாண்மை அலுவலர் ஜெயசுதா ஈரப்பதம் கண்டறியும் முறை பற்றி விளக்கினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மாரியப்பன், சிக்கந்தர், அமீன் செய்திருந்தனர்.

**சொட்டு நீர் பாசனம் அமைக்க அணுகலாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,00:58 IST

வாலாஜாபாத் : தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், வட்டார தோட்டக்கலை அலுவலகத்தை அணுகலாம் என, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) சந்துரு தெரிவித்தார்.அவர் கூறியதாவது: தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர்களான மா, கொய்யா, சப்போட்டா, நெல்லிக்காய், கனகாம்பரம், மல்லி, கறிவேப்பிலை போன்றவற்றை பயிரிட்டுள்ளனர்.இவற்றுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், வட்டார தோட்டக்கலை அலுவலகத்தை அணுகலாம். தேசியமயமாக்கப்பட்ட வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று, 65 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகளுக்கு, குறைந்த பட்சம் 1 எக்டர் நிலம் இருக்க வேண்டும். 1 எக்டருக்கு குறைவாக வைத்துள்ள விவசாயிகளுக்கு, நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் 65 சதவீதம் மானியம் வழங்கப்படும். இது தவிர மா, மல்லி, கறிவேப்பிலை செடிகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. பயன்பெற விரும்பும் விவசாயிகள் வாலாஜாபாத் வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலகத்திற்கு, தங்கள் நிலத்தின் சிட்டா, அடங்கல், நிலத்தின் வரைபடம், ரேஷன் அட்டை நகல், நான்கு புகைப்படங்களுடன் நேரில் வரவும்.இவ்வாறு சந்துரு தெரிவித்தார்.

**கோமுகி உபவடி நிலப்பகுதி விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,22:55 IST

கள்ளக்குறிச்சி : வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் விவசாயிகளுக்கு தொழிற் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் வணிக துணை இயக்குனர் சண்முகம் தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் செந்தில் (பொறுப்பு) வரவேற்றார். மண்டல ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர்(உழவியல்) இந்திராகாந்தி, காய்கறிகள் ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் பாபு, வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் தங்கராஜ், கால்நடை உதவி இயக்குனர் அழகரசன், வெள்ளாறு உபவடிநிலக் கோட்ட உதவி செயற்பொறியாளர் அன்புஇளங்கோ, மீன் வள ஆய்வாளர் சோழன் துணை வேளாண்மை அலுவலர்(உழவர் சந்தை) சந்திரசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.இதில் நீர்வள நிலவள திட்டத்தில் உள்ள தோட்டக்கலை, வேளாண்மை, கால்நடை, மீன்வளம், வேளாண் வணிகம் உள்

ளிட்ட 8 துறைகளின் பணிகள் மற்றும் பயன்கள் குறித்து விவசாயிகளிடம் எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கோமுகி உபவடி நிலம் சேர்ந்த கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தியாகதுருகம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர்(வேளாண் வணிகம்) ராஜ்பாபு நன்றி கூறினார்.

**விளைபொருளுக்கு சந்தை வசதி தேவை:வேளாண் பல்கலை முன்னாள் துணைவேந்தர் பேச்சு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,22:04 IST

கோவை : ""விவசாய விளைபொருளுக்கு முறையான சந்தை வசதி ஏற்படுத்தினால், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை இரண்டு மடங் காக அதிகரிக்கலாம்," என, பல்கலை கருத்தரங்கில் வேளாண் பல்கலை முன்னாள் துணைவேந்தர் ராமசாமி பேசினார். கோவை, பாரதியார் பல்கலையில், "இந்திய பொருளாதாரத்தில் உள்ள பிரச்னைகள், சவால்கள்' கருத்தரங்கு நடந்தது. பல்கலை பொருளியல் துறைத்தலைவர் முனியாண்டி வரவேற்றார்.
கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை முன்னாள் துணைவேந்தர் ராமசாமி தலைமை வகித்து பேசியதாவது:
நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் விவசாயம் முக்கிய பங்கு வகிக்கிறது. விவசாயத்தின் தற்போதைய நிலை பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் சவாலாக உள்ளது. வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கேற்ப, உணவுப்பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. ஆள் பற்றாக்குறை, போதிய சம்பளமின்மையால் விவசாய பரப்பு குறைந்து வருகிறது. விவசாயிகளும் மாற்றுத்தொழிலை தேடுகின்றனர். இதேநிலை நீடித்தால் எதிர்காலத்தில் உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும். விளைபொருட்களுக்கு போதிய சந்தை வாய்ப்பு கிடைக்காதது விவசாயம் வீழ்ச்சியடைய மற்றொரு காரணம். சர்வதேச அளவில் பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிடும் வகையில், விளை பொருட்களுக்கு சந்தை வசதிகளை மேம்படுத்த வேண்டும். விளைப்பொருட்களுக்கு முறையான சந்தை வசதி கிடைக்கும் போது, நாட்டின் பொருளாதாரம் இரண்டு மடங்காக அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. வரக்கூடிய நாட்களில் விவசாய விளைப்பொருட்கள் மட்டுமின்றி, மொபைல்போன், டூ-வீலர் போன்றவைக்கு நகர்பகுதி, கிராமம் என பாரபட்சமின்றி தேவை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளது. கிராமங்களில் சாலை வசதியை மேம்படுத்த வேண்டும். தரமான சாலைகள் அமைக்க வேண்டும். ரயில், விமானப் போக்குவரத்து சேவையை எளிமையாக்க வேண் டும். இவ்வாறு, அவர் பேசினார். வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன இயக்குனர் கிருஷ்ணகுமார், நகரியல் ஆய்வு நிறுவன இயக்குனர் கனகசபாபதி உட்பட பலர் பேசினர். பொருளியல் துறை பேராசிரியர் கோவிந்தராஜுலு நன்றி கூறினார்.தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு நடக்கும் கருத்தரங்கில் ஐந்து அமர்வுகளில்

பொருளாதார வளர்ச்சியில் வேளாண் துறை, சேவை மற்றும் நிதித்துறையின் பங்கு, உலக மயமாக்கல், சுற்றுச்சூழல் பிரச்னைகள் குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது. மாணவர்கள், ஆராய்ச்சியாளர்களின் 300க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் சமர்பிக்கப்படுகின்றன.

**பூண்டு விலை ரூ. 100 சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,21:58 IST

கோவை : பூண்டு வரத்து அதிகரித்ததால், கோவையில் பூண்டு விலை கணிசமாக குறைந்தது. கோவை தியாகி குமரன் மார்க்கெட்டில் கடந்த சில வாரங்களுக்கு முன் பூண்டு விலை கிலோ ரூ.240க்கு விற்றது. தமிழகத்தில் நீலகிரி, குஜராத், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து, கோவை மார்க் கெட்டுக்கு அதிக அளவு பூண்டு வரத் துவங்கியுள்ளது. இதனால் பூண்டு விலை கிலோவுக்கு ரூ.100 வரை குறைந்துள்ளது. ஊட்டி பூண்டு ரூ.140க்கும்; சைனாபூண்டு ரூ.180க்கும் விற் பனையானது. மலைப்பூண்டு ரூ.230 லிருந்து ரூ.130 ஆக குறைந்துள்ளது. அதிக விளைச்சலால் பூண்டுவிலை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித் துள்ளனர்.

**விவசாயிகளின் வாழ்க்கை "பாழ்'பட்டு விட்டது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,22:17 IST

அவிநாசி : ""நாடு முழுவதும் விவசாய பொருளாதாரம் பாதிக்கப்பட் டுள்ள நிலையில், அவர்களது வாழ்வாதாரம் "பாழ்'பட்டு விட்டது,'' என்று முன்னாள் எம்.பி., சுப்பராயன் வேதனை தெரிவித்தார். பால் உற்பத்தியாளர் கூட்டு நடவடிக்கை குழு சார்பில் அவிநாசி, சேவூர் ரோடு - வ.உ.சி., திடலில் உண்ணாவிரத போராட்டம் நேற்று நடந்தது. கூட்டு நடவடிக்கை குழு அமைப்பாளர் கார்த்திகேயன் தலைமை வகித்தார்.முன்னாள் எம்.பி., சுப்பராயன் பேசியதாவது: கோரிக்கைகளை வலியுறுத்தி தெருவுக்கு வந்து போராடும் அளவுக்கு, மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு எதிரான கொள்கையை கொண்டுள்ளது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. மத் திய அரசின் தவறான கொள்கையால், விவசாயியின் பொருளாதாரம் அடியோடு நொறுங்கி விட்டது. 1984-85ல் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு 34.5 சதவீதம். கடந்த நிதியாண்டில் இது 17.4 சதவீதமாக குறைந்துள்ளது. விவசாயம் எந்தளவுக்கு பாதிக்கப் பட்டுள்ளது என்பதற்கு சாட்சியாக உள்ளது. இத்தொழிலில் தொடர்ந்து நஷ்டம் ஏற்படுவதால், பெரும்பாலானோர் விவசாயம் செய்வதை விட்டு விட்டனர்.

நாட் டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு விவசாயத்தின் பங்களிப்பு 65 சதவீதம் என்று இருந்தாலும் கூட, விவசாயிகளின் வாழ்வாதாரம் "பாழ்'பட்டு விட்டது. விளைவித்த பொருளுக்கு உரிய விலை நிர்ணயிக்க முடியாமல் உள்ள விவசாயிகளுக்கு, பால் கொள்முதல் விலையை ஏற்ற, இந்த அரசு மறுக்கிறது. சில நாட் களுக்கு முன் பெட்ரோல் விலை உயர்ந்தபோது, அதற்கு முதல்வர் விளக்கம் அளித்தார். அப்போது, சர்வதேச மார்க்கெட்டில் விலை உயர்ந்த காரணத்தை சுட்டிக் காட்டிய முதல்வர், "பால் கொள் முதல் விலை உயர்ந்தால், அது மக்களின் தலையில் சுமையாக ஏறும்,' என்று சொல்கிறார். மக்களின் தலையில் விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல சுமையை ஏற்றி வைத்துள்ள மாநில அரசு, பால் விலை உயர்வை பற்றி கவலைப்பட தேவையில்லை. பால் உற்பத்தியாளர்களும் மனிதர்கள்தானே.

விவசாயத்தில் மிச்சமிருக்கிற ஒரே தொழிலான பால் உற்பத்தியை செய்யும் விவசாயிகளுக்கு உரிய கொள்முதல் விலையை இந்த அரசு வழங்க வேண்டும். இவ்வாறு, சுப்பராயன் பேசினார். இந்திய கம்யூ., ஒன்றிய துணை செயலாளர்கள் இசாக், பழனிசாமி, பாரதிய கிசான் சங்க மாவட்ட துணை தலைவர் வேலுசாமி, மா.கம்யூ., ஒன்றிய செயலாளர் வெங்கடாசலம், சி.ஐ.டி.யு., மாவட்ட செயலாளர் முத்துசாமி, ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் சுப்ரமணியன், நகர செயலாளர் ராமசாமி, கொ.மு.க., ஒன்றிய செயலாளர் லோகநாதன் உட்பட பலர் பேசினர்.
முன்னாள் எம்.பி., வேதனை கேனுக்கு பாடை கட்டி போராட்டம்: பால் உற்பத்தியாளர்கள், பொங்கலூர் பி.ஏ.பி., பாசன சபை கூட்டமைப்பு தலைவர் கோபால் தலைமையில், அவினாசிபாளையத்தில் பால் கேனுக்கு பாடை கட்டி போராட்டம் நடத்தினர். பால் விலையை உயர்த்தி தரக்கோரி, கடந்த 7ம் தேதி முதல் பால் உற்பத்தியாளர்கள், பல்வேறு இடங்களில் தொடர் போராட்டம் நடத்தினர். நேற்று காலை 10.00 மணியளவில், பொங்கலூர் அவினாசிபாளையம் தனியார் தோட்டத்தில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பால் கேன் மற்றும் மாடுகளுடன் குவிந்தனர்.

பால் கேனுக்கு பாடை கட்டி, மாலை அணிவித்து, மாடுகளின் கொம்புகளில் கருப்புத்துணி கட்டியும் போராட்டம் நடத்துவதற்கு தயார் நிலையில் இருந்தனர். அவர்களை கைது செய்ய, பல்லடம் டி.எஸ்.பி., தங்கதுரை தலைமையில் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். போராட்டம் நடத்தினால், கைது செய்வோம் என எச்சரித்தனர். ஆவேசமடைந்த விவசாயிகள், பாடை கட்டப்பட்ட பால் கேனை தூக்கிக் கொண்டு ரோட்டுக்குச் செல்ல முயன்றனர். பால் கேனையும், விவசாயிகளையும் போலீசார் கைது செய்து வேனில் ஏற்றினர். சில விவசாயிகள் மாடுகளையும் கைது செய்யுமாறு வாக்குவாதம் செய்தனர். ஒன்பது பெண்கள் உட்பட 84 பேர் கைதாகினர். கைதானவர்கள், பல்லடத்தில் உள்ள திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டனர். பேச்சுக்கு அரசு

அழைத்ததால், பால் உற்பத்தியாளர்கள் போராட்டத்தை விலக்கிக் கொள்வதாக அறிவிப்பு வெளியிட்டனர். அதன்பின், அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

**தென்னை விவசாயிகள் நல வாரியம் அமைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,23:13 IST

வத்தலக்குண்டு : வத்தலக்குண்டு ஒன்றியத்தில் தென்னை விவசாயிகள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. தென்னை நல வாரியத்தில் விவசாயிகள் பெயரை பதிவு செய்ய தோட்டக்கலை அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து வழங்க வேண்டும். விண்ணப்பத்துடன் போட்டோ,பட்டா,சிட்டா ஆகியவற்றை இணைக்க வேண்டும். தோட்டக்கலை அலுவலர்கள் நிலத்தை ஆய்வு செய்தபின் 70 முதல் 500 மரம் வரை உள்ள விவசாயிகள் சந்தா தொகையாக 100 ரூபாய், 501 முதல் ஆயிரம் மரம் வரை 200 ரூபாய், 1001க்கு மேல் உள்ள விவசாயிகள் 500 ரூபாய் கட்டி உறுப்பினராக வேண்டும்.

**ஏலக்காய், மிளகு விவசாய மேம்பாட்டிற்கு மத்திய அரசு சூ. 200 கோடி அனுமதி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,21:13 IST

கம்பம் : ஏலக்காய் மற்றும் மிளகு விவசாய மேம்பாட்டிற்கென மத்திய அரசு சூ. 200 கோடியை ஒதுக்கியுள்ளதாக, ஸ்பைசஸ் பார்க் திறப்பு விழாவில், ஸ்பைசஸ் வாரிய சேர்மன் வி.ஜே.குரியன் பேசினார்.
கேரளா கம்பமெட்டு அருகில் புத்தடி என்ற இடத்தில் ஸ்பைசஸ் பார்க் சூ கட்டப்பட்டுள்ளது. ஏலக்காய் மற்றும் மிளகு இருப்பு வைத்தல், சுத்தப்படுத்துதல், கிரேடிங், பேக்கிங், ஏற்றுமதி, ஆக்ஷன் ஹால் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் ஸ்பைசஸ் பார்க் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்பைசஸ் வாரிய சேர்மன் வி.ஜே.குரியன் தலைமை வகித்து பேசியதாவது: இந்தியாவில் எட்டு ஸ்பைசஸ் பார்க்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் இதுவும் ஒன்று. 12.5 ஏக்கர் பரப்பில், சூ 27 கோடியில் ஸ்பைசஸ் பார்க் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு ஏலக்காய் மறுநடவிற்கு சூ 54 கோடியும், மிளகு விவசாயம், மேம்பாடு, மார்க்கெட்டிங் போன்றவற்றிற்கு சூ 120 கோடியும் ஒதுக்கியுள்ளது. விலை கிடைக்காத காலங்களில் ஏல விவசாயிகள், தங்களுடைய காய்களை இங்குள்ள குடோவுனில் இருப்பு வைத்து விட்டு, அதற்கான அத்தாட்சி ரசீதை பயன்படுத்தி, இந்த வளாகத்தில் உள்ள வங்கியில் கடன் பெற்றுக்கொள்ளலாம். ஒரு ஆண்டிற்கு கூட தங்களின் ஏலக்காய் "கலர்' விட்டு போகாத வகையில் ஏலக்காயை பாதுகாக்க நவீன குடோன் வசதி

ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்றுமதியாளர்கள் இங்கிருந்தே நேரடியாக துறைமுகத்திற்கு சரக்குகளை கொண்டு செல்ல வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார். கேரள சட்டசபை எதிர்கட்சி தலைவர் உம்மன்சாண்டி ஸ்பைசஸ் பார்க்கை திறந்து வைத்தார். இடுக்கி எம்.பி., தாமஸ், எம்.எல்.ஏ.,க்கள் பிஜூமோல், ஜெயச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் கருத்து பரிமாற்ற பணிமனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,23:17 IST

சாத்தூர் : தமிழ்நாடு நீர் வள, நில வள திட்டத்தின் கீழ் வல்லம்பட்டி உப வடிநிலப்பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு சாத்தூரில் கருத்து பரிமாற்ற பணிமனை நடந்தது. வேளாண் வணிக துணை இயக்குனர் கணேசன் தலைமை வகித்தார். சுகுணா பவுல்ட்ரி புட் நிறுவன பிரதிநிதி வனத்துரை, என்.பி.ஆர். வேர் ஹவுஸ் உரிமையாளர் ஜெயராம், நிலா கோல்டு ஸ்டோரேஜ் நிறுவன மேலாளர் ஜேம்ஸ் ஜெயராஜ் ஆகியோர், "விவசாயிகள், விளை பொருள் குழுக்கள் அமைத்து கூடுதல் லாபத்தில் விற்பனை செய்யவும், விளை பொருள்களை குளிர் பதன கிடங்கில் வைத்து அதிக லாபத்தில் விற்பனை செய்ய முடியும்' என்றனர். வணிக அலுவலர் முருகேசன், உதவி வேளாண் அலுவலர் வேல்முருகன் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

தினத் தந்தி

## *கோதுமை, சர்க்கரை விலை குறைந்ததால் நாட்டின் பொது பணவீக்கம் 8.23 சதவீதமாக குறைந்தது*



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

கோதுமை, சர்க்கரை, பருப்பு வகைகள் விலை குறைந்ததையடுத்து, மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் சென்ற ஜனவரி மாதத்தில் 8.23 சதவீதமாக குறைந்துள்ளது. இது, டிசம்பர் மாதத்தில் 8.43 சதவீதமாக இருந்தது.

7 சதவீதமாக குறையும்

டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது 0.20 சதவீதம் குறைந்ததையடுத்து, நடப்பு நிதி ஆண்டிற்குள் பணவீக்கம் 7 சதவீதமாக குறையும் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். திங்கள்கிழமை அன்று பங்கு வர்த்தகம் நன்றாக இருந்ததற்கு இந்த பணவீக்கம் சற்று குறைந்ததும் ஒரு காரணமாகும்.

சென்ற ஜனவரி மாதத்தில் சர்க்கரை மற்றும் கோதுமை விலை முறையே 15 சதவீதம் மற்றும் 4.94 சதவீதம் குறைந்துள்ளது. மேலும் பருப்பு வகைகள் (12.78 சதவீதம்), உருளைக்கிழங்கு(1.21 சதவீதம்) விலையும் குறைந்துள்ளது.

அதேசமயம், சென்ற ஓர் ஆண்டு காலத்தில், காய்கறி விலை 65 சதவீதமும், வெங்காயம் விலை இரண்டு மடங்கும் உயர்ந்துள்ளது. பழங்கள் விலை 15.01 சதவீதமும், முட்டை, இறைச்சி, மீன் விலை 15.09 சதவீதமும், சமையல் எண்ணெய் விலை 7.16 சதவீதமும் உயர்ந்துள்ளது.

சென்ற ஓர் ஆண்டு காலத்தில், பெட்ரோல் விலை 27.37 சதவீதம் உயர்ந்ததையடுத்து, எரிபொருள் பணவீக்கம் 11.41 சதவீதம் உயர்ந்துள்ளது.

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்திற்கான பொது பணவீக்கம் 7.48 சதவீதத்திலிருந்து 8.08 சதவீதமாக மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சென்ற 2010–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இந்த பணவீக்கம் 8 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாரத ரிசர்வ் வங்கி

சென்ற 2010–ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து, இதுவரையிலான காலத்தில், பாரத ரிசர்வ் வங்கி, பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 7 முறை உயர்த்தி உள்ளது. இதனையடுத்து, இனிவரும் மாதங்களில் பொது பணவீக்கம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், இது ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டு வரம்பான 5–6 சதவீதத்திற்கும் அதிகமாக இருப்பதால், வரும் மார்ச் 17 அன்று வெளியிடும் இடைப்பருவ காலாண்டு கடன் கொள்கை ஆய்வு

அறிக்கையில் இந்த வட்டி விகிதங்களை ரிசர்வ் வங்கி மேலும் உயர்த்தும் என்று சில பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## குன்னூரில் தங்க தேயிலை விருதுக்காக டீத்தூள் ருசி பார்க்கும் நிகழ்ச்சி

குன்னூர், பிப்.15–

தங்க தேயிலை விருதுக் காக நேற்று குன்னூரில் தேயிலை தூள் ருசி பார்க்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தேயிலைக்கு விலை வீழ்ச்சி

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்திய தேயி லைக்கு விலை வீழ்ச்சி ஏற் பட்டது. இதற்கு தரம் இல்லா ததே காரணம் என்று அப் போது கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து தேயிலை வாரிய மும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் இணைந்து, தென்னிந்திய தேயிலை தூளின் தரத்தை உயர்த்த பல்வேறு நடவடிக் கைகளை மேற்கொண்டன.

இதன் ஒரு பகுதியாக தங்க தேயிலை விருதுக்கான போட்டி நடத்த திட்டமிடப் பட்டது. இந்த கடந்த 2004–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தங்க தேயிலை விருதுக்கான போட்டியில் பங்கேற்கும் தேயிலை தொழிற்சாலையின் மாதிரிகள் பெறப்பட்டு, அவை சோதனை செய்யப்படும்.

ருசி பார்க்கும் நிகழ்ச்சி

முதலில் தேயிலை தூளின் தரம் குறித்து ருசி பார்க்கப் படுகிறது. அதன் பின்னர் தேயிலை செடிகளுக்கு தெளிக்கப்படும் பூச்சி மருந்து களின் அளவை கண்டுபிடிக்க வால்பாறையில் தேயிலை ஆராய்ச்சி மையத்தில் ஆய்வு நடத்தப்படும். அதன் பிறகு இறுதி போட்டிக்கு தேயிலை தூள்உட்படுத்தப்படுகிறது.

இதில் தேர்வு பெறும் தேயி லையை தயாரித்த தேயிலை தொழிற்சாலையின் தூள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப் படும். தங்க தேயிலையின் விருதுக்கான ருசி பார்க்கும் நிகழ்ச்சி குன்னூர் உபாசி அரங்கில் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சியை உபாசியின் தேயிலை ஆராய்ச்சி மைய ஆலோசகர் டாக்டர் முரளிதரன் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் உபாசி பொது மேலாளர் உல்லாஸ்மேனன், உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய உதவி இயக்குனர் டாக்டர் ராதாகிருஷ்ணன், அமைப்பு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் 75 தொழிற் சாலைகளின் 173 மாதிரிகள் வந்திருந்தன. இதில் 17 சிறு தொழிற்சாலைகளின் தேயிலை தூள் அடங்கும்.

நடுவர்கள்

இந்த ஆண்டு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளும் போட்டியில் பங்கு பெற்றுள் ளன. போட்டியின் நடுவர் களாக சிபிஷ்கா, அருமேஷ் ரங்கய்யா, நூர்முகமது, சுசில்மார்கோஸ், தாமஸ், விஜயசங்கர் ஆகிய 6 பேர் கலந்து கொண்டனர். நீலகிரி, வயநாடு, வால் பாறை, நெல்லை மாவட்டம் மாஞ்சோலை, தேனி மாவட்டம் ஹைவேலிஸ் மற்றும் கேரளா, கர்நாடகா ஆகிய பகுதிகளில் தேயிலை தொழிற்சாலைகளின் தூள் ஆகியவை போட்டியில் பங்கு பெற்றுள்ளன. போட்டியில் ஆர்தோடக்ஸ் சி.டி.சி. கிரீன்பீல்டு, ஆர்கானிக் டீ ஆகியவற்றின் தேயிலை தூள் இடம்பெற்றுள்ளன.இறுதி போட்டி வருகிற 26–ந் தேதி கோவையில் நடைபெற உள்ளது. 27–ந் தேதி கோவையில் நடைபெறும் தேசிய தேயிலை மாநாட்டில் வெற்றி பெற்ற தேயிலை தொழிற்சாலைக்கு தங்க தேயிலை விருது மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## தங்க தேயிலை விருதின் மூலம் தேயிலை தூளுக்கு அதிக விலை கிடைக்க வாய்ப்பு ஆராய்ச்சி மைய ஆலோசகர் தகவல்

குன்னூர், பிப்.15–

தேயிலை தூளுக்கு அதிக விலை கிடைக்க வாய்ப்பு உள்ளதாக உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய ஆலோசகர் டாக்டர் முரளிதரன் கூறினார்.

பேட்டி

தங்க தேயிலை இறுதி போட்டிக்கான தேயிலை ருசி பார்க்கும் நிகழ்ச்சி குன்னூர் உபாசி அரங்கில் நடை பெற்றது. நிகழ்ச்சிக்கு பின்னர் உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய ஆலோசகர் டாக்டர் முரளிதரன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

தென்னிந்திய தேயிலை தூள் தரமானது என்பதை மற்ற மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் தெரியப்படுத்த தங்க தேயிலை விருது போட்டி நடத்தப்படுகிறது. கடந்த 2004–ம் ஆண்டு தொடங்கிய இந்த போட்டி குன்னூரில் 2 முறையும், கொச்சியில் 2 முறையும், துபாயில் 2 முறையும் நடத்தப்பட்டது. இந்த ஆண்டு நடத்தப்படும் 7–வது தங்க தேயிலை விருதுக்கான சான்றிதழ் கோவையில் வழங்கப்படும்.

173 மாதிரிகள்

இந்த போட்டியில் கம்பெனி தேயிலை எஸ்டேட் தொழிற் சாலைகளும், சிறு தேயிலை

தொழிற்சாலைகளும், கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளும் பங்குபெறு கின்றன. சி.டி.சி. ரக தேயிலை தூள் 500 கிராமும், ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 250 கிராமும், ஆர்கானிஸ் தேயிலை தூள் 150 கிராமும், கிரீன் டீ 250 கிராமும் மாதிரியாக வழங்க வேண்டும்.

7–வது போட்டியில் 173 மாதிரிகள் வந்துள்ளன. ஒரு மாதிரிக்கு 3 சோதனைகள் நடத்த ரூ.6 ஆயிரம் வரை செலவு பிடிக்கும். 3 சோதனை களிலும் தேர்வு பெற்ற தேயிலை தூளை தயாரித்த தேயிலை தொழிற்சாலையே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். தேயிலை ருசிபார்க்கும் நிகழ்ச்சிக்கு பின்னர் தேயிலை செடிகளுக்கு அடிக்கப்பட்ட மருந்துகளின் அளவுகள் ஆய்வு கூடத்தில், சோதனை நடத்தப்படும். செடிகளுக்கு பூச்சி மருந்து அடிக்கும் அளவை அரசு நிர்ணயித்து உள்ளது. இந்த அளவுக்கு மேல் சென்றுவிட்டால், தேயிலை தூள் தேர்வாகாது. இறுதி போட்டியில் நமது நாட்டில் இருந்து தேயிலை தூள் இறக்குமதி செய்யும் வெளி நாடுகளின் பிரதிநிதிகளின் நடுவர்களும் கலந்து கொள்கிறார்கள். கடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற தொழிற்சாலைகளுக்கு விருது மட்டுமே வழங்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு விருது மட்டுமின்றி மாற்று ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

அதிக விலை கிடைக்க வாய்ப்பு

7–வது தங்க தேயிலை விருதுக்கான போட்டியில் கலந்து கொண்ட தொழிற் சாலைகளின் தேயிலை தூள் முதல் முறையாக அடுத்த மாதம் (மார்ச்) 7–ந் தேதி எலெக்ட்ரானிக் ஏலத்துக்கு அனுப்பப்படும்.

இதன் மூலம் இந்தியாவில் எந்த மூலையில் இருந்தாலும் தேயிலையை வாங்கலாம். இந்த முறை தேசிய பங்கு சந்தை மூலம் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தேயிலை தூளுக்கு அதிக விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,870-2,900

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 3,300-3,350

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 7,500-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,810-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்,
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 12,400.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,700-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,195.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,310.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,110.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 620-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,பிப்.14-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 19,000 | 190.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,400 | 88.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துவரம்பருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு(வெள்ளை) | ரூ. 6,700 | 70.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (முவை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,930 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,பிப்.14-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. | வி.797 22எம்.எம் | ரூ. | 12,935 |
| 2. | ஜெயதர் 22 எம்.எ | ரூ. | ——— |
| 3. | ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. | 15,537 |
| 4. | எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் | ரூ. | 16,450 |
| 5. | சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. | 16,450 |
| 6. | எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. | 16,731 |
| 7. | டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. | 23,058 |

## கோவை உழவர் சந்தை

கோவை,பிப்.14-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36-00 | புதினா | ரூ. | 16-00 |
| கத்தரிக்காய் | ரூ. | 26-28 | காலிப்பிளவர் | ரூ. | 18-20 |
| வெண்டைக்காய் | ரூ. | 31-30 | பொறியல் தட்டை | ரூ. | 18-20 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 7-8 | பச்சை மொச்சை | ரூ. | 28-30 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6-7.50 | தேங்காய் | ரூ. | 13-14 |
| புடலை | ரூ. | 14-18 | பட்டாணி | ரூ. | 20-42 |
| பீர்க்கான்காய் | ரூ. | 20-20 | பூண்டு | ரூ. | 210-240 |
| கரைக்காய் | ரூ. | 13-14 | கறிவேப்பிலை | ரூ. | 52-00 |
| பாகற்காய் | ரூ. | 14-15 | அகத்தி | ரூ. | 14-00 |
| கொத்தவரை | ரூ. | 25-00 | வாழைக்காய் | ரூ. | 16-00 |
| பூசணிக்காய் | ரூ. | 19-00 | திராட்சை | ரூ. | 30-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 10-11 | குடைமிளகாய் | ரூ. | 32-00 |
| மோர்க்காய் | ரூ. | 16-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 24-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18-20 | டபுள்பீன்ஸ் | ரூ. | 36-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20-00 | கறிபீன்ஸ் | ரூ. | 20-26 |
| சின்னவெங்காயம் | ரூ. | 32-34 | புஸ்பீன்ஸ் | ரூ. | 28-00 |
| பெரியவெங்காயம் | ரூ. | 17-00 | காளான் | ரூ. | 80-140 |
| இஞ்சி | ரூ. | 33-00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| முருங்கைக்காய் | ரூ. | 90-00 | சப்போட்டா1கிலோ | ரூ. | 16-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 22-00 | கொய்யா1கிலோ | ரூ. | 22-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 18-20 | மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 80-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | ஆப்பிள் | ரூ. | 110-00 |
| சக்கரவள்ளி கிழங்கு | ரூ. | 14-00 | சாத்துக்குடி | ரூ. | 28-00 |
| முள்ளங்கி | ரூ. | 7-12 | நெல்லிக்காய் | ரூ. | 20-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 32-34 | ஆரஞ்சு | ரூ. | 38-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 18-20 | வெள்ளரி | ரூ. | 30-32 |
| நூல்கோல் | ரூ. | 24-26 | புளி 1 கிலோ | ரூ. | 80-00 |
| கொத்துமல்லி | ரூ. | 20-00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36-00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20-00 | அவரை | ரூ. | 20-24 |
| முட்டைகோஸ் | ரூ. | 12-14 | மக்காச்சோளம் | ரூ. | 18-00 |
| கலர்கோஸ் | ரூ. | 26-00 | துவரை | ரூ. | 20-00 |
| | | | பூண்டு | ரூ. | 160-210 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,பிப்.14-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 85.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1160 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1220 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | 72.00 |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 74.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,420 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1820 | 120.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,730 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 63.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,250 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,280 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,040 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,100 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | - |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.21700 |
| மிளகு (சேட்டன்) | ரூ.22100 |
| மிளகு (வயநாடன்) | ரூ.22700 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 6000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 7200 |
| சுக்கு(புதியது) | ரூ.16000 |
| சுக்கு(பழையது) | ரூ.7500 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1200 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1000 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10300 |
| கொப்பரை நாடன் | ரூ.6923 |
| கொப்பரை ராசு | ரூ.6775 |
| கொப்பரை தில்பசன் | ரூ.7075 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ.7325 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6625 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22600 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23600 |
| ரப்பர் பால் | ரூ. 14000 |
| காப்பி | ரூ. 9300 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2350 |
| நேந்திரகாய் | ரூ. 1350 |
| இஞ்சி | ரூ. 1350 |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.600.00 | ரூ. 750.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 3.50 | ரூ. 6.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.20.00 | ரூ.25.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.12.00 | ரூ.15.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.5.00 | ரூ.8.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.15.00 | ரூ.20.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.15.00 | ரூ.20.00 |
| மேராக்காய் | ரூ.7.00 | ரூ.8.00 |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.320.00 | அதிகபட்சவிலை | ரூ.407.00 |
| சராசரி விலை | ரூ.298.33 | சராசரி விலை | ரூ.379.79 |
| குறைந்தபட்சவிலை | ரூ.160.00 | குறைந்தபட்சவிலை | ரூ.326.00 |

**பட்டு நூல் ரூ.2,730**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,080.00 | 15,224.00 | 15,280.00 |
| ஒரு கிராம் | 1,885.00 | 1,903.00 | 1,910.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 46,000.00 | 48,200.00 | 47,500.00 |
| ஒரு கிராம் | 49.20 | 48.20 | 47.50 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**பருத்தி (அன்னூர்)**

| | |
|---|---|
| டி.சி.எச் | ரூ.7400-7870 |
| போல்காட் | ரூ.6500-6550 |
| ஆர்.சி.எச் | ரூ.6550-6750 |

**மஞ்சள் (கோவை)**

| | |
|---|---|
| தனி விரலி | ரூ.12000-12006 |
| தனி கிழங்கு | ரூ.11000 |

**தேங்காய்**

| | |
|---|---|
| அன்னூர் | ரூ.700-900 |
| பொள்ளாச்சி | ரூ.500-700 |
| ஆனைமலை | ரூ500-600 |
| நெகமம் | ரூ.500-600 |

**மக்காச்சோளம்**

| | |
|---|---|
| அன்னூர் | ரூ1000-00 |
| பொள்ளாச்சி | ரூ.1000-1050 |
| தெதப்பம்பட்டி | ரூ.1060-1000 |
| உடுமலை | ரூ.1010-1015 |

**புகையிலை (குழி)**

| | |
|---|---|
| பல்லடம் | ரூ.4000-5000 |

**நெல்**

| | |
|---|---|
| தெதப்பம்பட்டி | ரூ.850-950 |

**கொண்டகடலை**

| | |
|---|---|
| தெதப்பம்பட்டி | ரூ.2800-2900 |